# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2016

2071

| தரம் : 07 | தமிழ்மொழி<br>சுட்டெண் : ........................................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
| --- | --- | --- |

### பகுதி - I

* இவ் வினாத்தாளுக்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதவும்.

* மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்பதில் கமலம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
 1) சரக்கொன்றை 2) தாமரை
 3) மல்லிகை 4) றோசா

02. "சிற்றூர் மக்கள் பச்சையாக உண்டு உரம் பெற்றார்கள்" என்பதில் உள்ள உரம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
 1) வலிமை 2) அழகு
 3) காய்கறி 4) இளமை

03. மன்னன் கோபமாகப் பேசினான். இதில் உள்ள கோபம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
 1) மூர்க்கம் 2) முனிவு
 3) சாந்தம் 4) அவமரியாதை

04. தோட்டத்தில் பயிர்களைச் செறிவாக நாட்டினர். இதில் செறிவு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
 1) நெருக்கம் 2) அதிகம்
 3) வரிசை 4) ஐது

05. பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்துக்களை மட்டும் கொண்ட தொகுதி
 1) ஜ, ஷ 2) ஜ, ஸ
 3) ஹ, ச 4) ஸ்ரீ, க

06. தமிழிலுள்ள குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?
 1) 5 2) 90
 3) 95 4) 7

07. தபுதாரன் என்பதன் எதிர்ப்பாற் சொல் யாது?
 1) தபுதாரி 2) விதவை
 3) தபுதாரினி 4) செல்வி

08. பின்வருவனவற்றுள் இரட்டைமொழி அல்லாதது
 1) நறநற 2) கசகச
 3) ஏறியிறங்கி 4) படபட



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

09. ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டிற்கும் பொதுவாக அமையும் சொல்,
1) மூதாட்டி
2) சிறுவன்
3) வீராங்கனை
4) நோயாளி

10. பின்வருவனவற்றுள் இறந்த காலம் காட்டும் சொல்,
1) போனான்
2) போகிறான்
3) போவான்
4) போதல்

11. சின்னஞ்சிறிய என்பது,
1) அடுக்குத்தொடர்
2) இணைமொழி
3) அடுக்கிடுக்குத்தொடர்
4) இரட்டைக்கிளவி

12. கடல், சக்கரம், மோதிரம் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
1) ஆழி
2) சமுத்திரம்
3) பரவை
4) வேலை

13. விபத்திற் சிக்கிய இராமனின் கால்கள் முறிந்தன. இவ்வாக்கியத்தின் எழுவாய்
1) இராமன்
2) விபத்து
3) முறிந்தன
4) கால்கள்

14. பேசுவோனைச் சுட்டும் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்?
1) படர்க்கை
2) தன்மை
3) தொழிற்பெயர்
4) முன்னிலை

15. அறுபதாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா
1) மணிவிழா
2) பொன் விழா
3) காகித விழா
4) பவள விழா

16. மல்ரிமீடியா (MULTIMEDIA) என்பதன் கலைச்சொல்
1) ஊடகம்
2) தரவுத்தளம்
3) பல்லூடகம்
4) எண்மானம்

17. நானும் நீயும் பாடசாலைக்குச் ......................................
1) சென்றார்கள்
2) செல்கிறாய்
3) செல்வார்கள்
4) செல்வோம்

18. ஒட்டுறவின்றி இணைந்திருத்தல் என்பதை விளக்கும் உவமைத்தொடர்
1) வாடும் பயிருக்கு வான் மழை போல
2) ஓடும் புளியம்பழமும் போல
3) புதையல் காத்த பூதம் போல
4) தலையிருக்க வாலாடுவது போல

19. சந்திரகாசம் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?
1) அழக சுந்தரதேசிகர்
2) கி. வா. ஜகந்நாதன்
3) நெ. து. சுந்தரவேலு
4) குப்புசாமி ஆழ்வார்

20. உறவு முறைக் கடிதம் ஒன்றில் இடம் பெறாத உறுப்பு எது?
1) விளிப்பு
2) தலைப்பு
3) செய்தி
4) ஒப்பம்

($1\frac{1}{2}$ x 2 = 30 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வினாக்களுக்கும் ஐந்தாம், ஆறாம், ஏழாம் வினாக்களுள் ஏதாவது ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (5) வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. வகுப்பறையில் நீர் மேற்கொண்ட ஒப்படைக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1) இக்கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பாட அலகு யாது?

2) இக் கணிப்பீட்டிற்கான தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்?

3) இக் கணிப்பீட்டை மேற்கொள்ள ஆசிரியர் வழங்கிய அறிவுரைகள் மூன்று எழுதுக.

4) இக்கணிப்பீட்டினால் நீரடைந்த நன்மைகள் மூன்று எழுதுக.

( 12 புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1) சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்.

2) விஞ்ஞானத்தின் விந்தைகள்

3) நான் பறவையானால்

4) என் மனங்கவர்ந்த மாலைக்காட்சி

(18 புள்ளிகள்)

Education கல்வி

03. வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி 75 சொற்களில் அமையுமாறு உமது நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுக.

( 15 புள்ளிகள்)

04. **பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1) தமிழ்த் தட்டச்சின் தந்தை என்ற கட்டுரை கா. மாணிக்கவாசகரால் எழுதப்பட்ட ஆண்டு எது?

2) சேரமன்னன் இரும்பொறை அரசாண்ட நகரம் எது?

3) பென்சில் செய்வதற்குப் பயன்படும் பொருட்கள் ஐந்தினை எழுதுக.

4) ‘உயிர் காக்கப் பயிர் காப்போம்’ எனும் கட்டுரை எத்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது?

5) ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்றினையும் அட்டவணைப்படுத்துக.

6) ‘கடலும் கிணறும்’ எனும் பாடத்தில் ஔவையாரின் இயல்பான பண்பாகக் கூறப்பட்டது யாது?

($6 \times 2\frac{1}{2} = 15$ புள்ளிகள்)



kalvi.lk

05. **பின்வரும் பாடலை நன்கு வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடையெழுதுக.**

இட்டதோர் தாமரைப் பூ
இதழ் விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டில்லைக் குத்துமில்லை
வேறு வேறிருந் தருந்தும்
கட்டில்லைக் கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்க மில்லை.

(பாரதிதாசன்)

1) இப்பாடல் எதனுடைய ஒற்றுமை நிறைந்த வாழ்வைச் சுட்டுகிறது?.

2) புறாக்கள் எவ்வாறு அமர்ந்து உணவையுண்டன?

3) இப்பாடலில் உள்ள உவமையணியை எழுதுக.

4) புறாக்களிடம் எத்தகைய கீழான குணங்கள் இல்லை?

5) "வேறு வேறிருந் தருந்தும்" இதனைப் பிரித்து எழுதுக.

(10 புள்ளிகள்)

06. **பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

"முஸ்லிம் நேசன்" என்ற பத்திரிகை அறிஞர் சித்திலெப்பையால் வெளியிடப்பட்டது. மக்களின் மன விரிவுக்கும், தெளிவுக்குமான அறிவு நூல்கள் குறைவாக இருந்தமையால். தமிழ்மொழியை மாத்திரம் தெரிந்தவர்கள் பயன்பெறும் பொருட்டுத் தாம் அப்பத்திரிகையை ஆரம்பித்ததாக அவர் முதலாவது இதழிலே குறிப்பிட்டார். அந்நியர் ஆட்சியிலே தூக்கத் திலிருந்த சுதேச முஸ்லிம்களைத் தட்டியெழுப்புவதாக அப்பத்திரிகை அமைந்தது. அது யாவரும் வாசித்தறியக் கூடிய எளிய வசன நடையில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1) அறிஞர் சித்திலெப்பையால் வெளியிடப்பட்ட பத்திரிகை எது?

2) இப்பத்திரிகை எதற்காக ஆரம்பிக்கப்பட்டது?

3) முஸ்லிம் நேசன் என்ற பத்திரிகையின் மொழிநடை எவ்வாறு அமைந்திருந்தது?

4) அறிஞர் சித்திலெப்பை எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

5) சுதேச முஸ்லீம்கள் என்பது யாரைக் குறிக்கின்றது?

(10 புள்ளிகள்)

07. **பின்வருவனவற்றுள் மூன்றினைத் தெரிவு செய்து கருத்துள்ள வாக்கியம் எழுதுக.**

1)
1) சலசல
2) மடமட
3) விருப்புவெறுப்பு
4) ஏறஇறங்க
5) கரிய கரிய
6) சின்னஞ்சிறிய

(06 புள்ளிகள்)

2) **வழுநீக்கியெழுதுக.**

செள்வத்தை வேறு யாராவது துன்புருத்தி அடித்துக் கொண்டு போய்ச் செலவளிப்பார்கல். ஆனாள் இவரிடம் எந்தத் திருடணும் வர நினைக்கமாட்டான்,

(04 புள்ளிகள்)



kalvi.lk

## ONLINE CLASSES - 2025

# *May* NEW ADMISSIONS

# 2ம் தவணை வகுப்புகள்

## தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**